
# Action taken on the Water supply issues reported

DINAKARAN -02/03/2026



குழாய் உடைந்து வீணாகும் குடிநீர்




**125 mm GI pipeline was rectified and water supply effected on 02.03.2026 under CWSS to Kambalapatti and 24 Rural Habitations in Anamalai and Pollachi South unions of Coimbatore district**

# Action taken on the Water supply issues reported

**DINAMALAR -03/03/2026**



• தினமலர் • திருச்சி • 3.3.2026 9

## காவிரி குடிநீர் கிடைக்காமல் பொதுமக்கள் கடும் அவதி

வெள்ளியணை, மார்ச் 3—

மணவாடி ஊராட்சிக்கு உட்பட்ட பெருமாள்பட்டியில் 15 லட்சம் கொள்ளளவு கொண்ட தரை மட்ட நீர்த்தேக்க தொட்டிக்கு காவிரி ஆற்றிலிருந்து ராட்சத குழாய் மூலம் தண்ணீர் கொண்டு வரப்படுகிறது. இங்கிருந்து மணவாடி ஊராட்சி அருகிலுள்ள மூக்கணாங்குறிச்சி, பிச்சம்பட்டி, பாகநத்தம், காக்காவாடி உள்ளிட்ட கிராமங்களுக்கு தண்ணீர் கொண்டு செல்லப்படுகிறது.

இதன் மூலம் சம்பந்தப்பட்ட ஊர்களின் குடியிருப்புவாசிகளுக்கு நாளொன்றுக்கு ஒரு நபருக்கு 55 லிட்டர் வீதம் காவிரி குடிநீர் வினியோகம் செய்யப்படுகிறது.

இந்நிலையில் மணவாடி ஊராட்சிக்கு உட்பட்ட அனைத்து ஊர் மக்களும் காவிரி குடிநீர் கிடைக்காமல் கடந்த மூன்று நாட்களாக தவித்து வருகின்றனர். இதனால் அருகிலுள்ள உப்பிடமங்கலம், ஏமூர் போன்ற பகுதிகளுக்கு சென்று குடிநீர் எடுத்து வருகின்றனர்.

இதுகுறித்து விசாரித்த போது, கட்டளை காவிரி ஆற்றிலிருந்து தண்ணீர் தொட்டிக்கு குடிநீர் வரவில்லை என்பதும், அதனால் தண்ணீர் வினியோகம் செய்ய முடியாத சூழல் ஏற்பட்டுள்ளதும் தெரிய வந்தது.

எனவே, இப்பிரச்னையை உடனடியாக தீர்ப்பதற்கு மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர்.




**400mm DI pipe line leak was rectified and water supply effected on 03.03.2026 under CWSS to 274 rural habitation in Thanthoni union of karur District**

# Action taken on the Water supply issues reported

**DAILY THANTHI -03/03/2026**


முத்துப்பேட்டை அருகே

தடையின்றி குடிநீர் வழங்கக்கோரி சாலை மறியல்

போக்குவரத்து பாதிப்பு




**Pipe line leak was rectified and water supply effected on 04.03.2026 under Vedaranyam CWSS**

# Action taken on the Water supply issues reported

**DINAMALAR -05/03/2026**



தயக்கம்

- மேல்நிலை தொட்டிகளில் மூடி இல்லாததால்
- குப்பை கலந்து தண்ணீர் வருவதால் அச்சம்

தேவகோட்டை, மார்ச் 5-

தேவகோட்டை சுற்று வட்டார பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் தொட்டிகளில் மூடி இல்லாததால் குப்பை விழுவதோடு பாதுகாப்பு இல்லாமல் உள்ளது.






**OHT cleaned and manhole cover fixed over OHT and water is being supplied under Sivagangai CWSS.**

# Action taken on the Water supply issues reported

**DAILYTHANTHI -06/03/2026**



## தவிக்கும் வாய்க்கு தண்ணீரில்லை பாலகிருஷ்ணாபுரத்தில் அவதி

**சோழவந்தான், மார்ச் 6–**

சோழவந்தான் அருகே பாலகிருஷ்ணாபுரம் பொதுமக்கள் ஒரு மாதத்திற்கும் மேலாக குடிநீர் கிடைக்காமல் தவியாய் தவிக்கின்றனர். அப்பகுதி ஜோதி கூறியதாவது: இங்கு 500க்கும் மேற்பட்ட வீடுகள் உள்ளன. சின்ன இரும்பாடி, பாலகிருஷ்ணாபுரம், சாலாட்சிபுரம் பகுதிகளுக்கு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் குடிநீர் சப்ளை செய்யப்பட்டது.

இரும்பாடியில் இருந்து கரட்டுப்பட்டி பிரிவு வரை ரோடு பணிகள் நடக்கிறது. இதன் ஒரு பகுதியாக சின்ன இரும்பாடியில் கால்வாய்ப்பாலம் அமைக்கப்பட்டது. இதன் வழியே செல்லும் குழாய் உடைந்ததால் குடிநீர் சப்ளை நிறுத்தப்பட்டது. ரோடு பணிகள் முடிந்தும் சரி செய்யப்படாததால் ஒரு மாதத்துக்கும் மேலாக குடிநீரின்றி தவிக்கிறோம். தற்போது போர்வெல் தண்ணீர் வழங்கப்படுகிறது. இதனை குடிக்க முடியாததால், விலைக்கு வாங்கி பயன்படுத்துகிறோம். பலர் இதனையே குடிநீராக பயன்படுத்தி நோய் பாதிப்புக்கு ஆளாகின்றனர். ஒன்றிய அதிகாரிகளிடம் தெரிவித்தும் பலனில்லை. மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.





**Damaged 63mm PVC pipe due to road widening work was rectified and water supply effected under CWSS to Vadipatti TP and 7 other habitations in Vadipatti union in Madurai District**

# Action taken on the Water supply issues reported

**DAILYTHANTHI -06/03/2026**



கிணத்துக்கடவு அருகே

## 15 நாட்களாக குடிநீர் வினியோகம் செய்யாததால் கிராம மக்கள் அவதி

நெகமம்,மார்ச்.6-

கிணத்துக்கடவு வரதனூர் ஊராட்சியில் செங்குட்டைப்பாளையம், மூட்டாம்பாளையம், சோழனூர் ஊராட்சியில் சோழனூர், பழனிக்கவுண்டனூர் ஆகிய கிராமங்கள் உள்ளன. ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர். இவர்களுக்கு அம்பராம்பாளையம் கூட்டு குடிநீர் திட்டத்தின் கீழ் குடிநீர் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதற்கிடையே மேற்கண்ட கிராமங்களை சேர்ந்த மக்களுக்கு கடந்த 15 நாட்களாக குடிநீர் வினியோகம் செய்யப்படவில்லை என்று கூறப்படுகிறது. இதனால் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டு கிராம மக்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளனர். ஆழ்துளை கிணறுகளில் இருந்து வரும் தண்ணீரை மற்றவைகளுக்கு பயன்படுத்தினாலும், குடிநீர் வினியோகம் செய்யாததால் குடிப்பது, சமையல் செய்வது உள்ளிட்டவற்றுக்கு அவதிப்பட வேண்டியது உள்ளது. இதனால் குடிநீரை விலை கொடுத்து வாங்கும் நிலை உள்ளது. கோடைக்காலம் நெருங்குவதையொட்டி தற்போதே வெயில் சுட்டெரித்து அதன் தாக்கமும் இருந்து வருகிறது. இதனால் குளம், ஆறு, அணை உள்ளிட்ட நீர்நிலைகளில் தண்ணீர் குறைந்தும், வறண்டும் உள்ளது. இந்தசூழ்நிலையில் கோடைக்காலத்தின்போது குடிநீர் வினியோகம் அடியோடு பாதிக்கும் என கிராம மக்கள் அச்சத்தில் உள்ளனர்.

இதுகுறித்து குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகள் கூறியதாவது:-

அம்பராம்பாளையம் கூட்டு குடிநீர் திட்ட குழாய்களில் சிறிய அளவிலான உடைப்பு மற்றும் அடைப்பு ஏற்பட்டு வருகிறது.

இது எந்த இடத்தில் ஏற்பட்டுள்ளது என்று உடனே தெரியாமல் போவதால் விரைந்து சீரமைத்து குடிநீர் வினியோகம் செய்வதில் சிக்கல் ஏற்படுகிறது. எனவே, இந்த பிரச்சினையை உடனடியாக சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அவர்கள் கூறினர்.




**100mm GI pipe line leak was rectified and water supply effected from 07.03.2026 under CWSS to 378 habitations in Pollachi North, Pollachi South and Kinathukadavu unions in Coimbatore District**

# Action taken on the Water supply issues reported

**DINAMALAR - 9/03/2026**



# குறைந்தளவு வினியோகத்தால் கடும் குடிநீர் தட்டுப்பாடு

## கண்டமனூர் ஊராட்சியில் அடிப்படை வசதி இன்றி தவிப்பு

தினமலர் ரூப்பர் ரிப்போர்ட்டர்







**140mm PVC pipe line leak was rectified and water supply effected on 11.3.2026 under Kandamanur CWSS in Theni district**

# Action taken on the Water supply issues reported

**DINAMALAR - 10/03/2026**



## வாரம் ஒருநாள் வினியோகத்தால் கடும் குடிநீர் தட்டுப்பாடு

### ஜி.உசிலம்பட்டி ஊராட்சியில் அடிப்படை வசதி இன்றி தவிப்பு

உங்கள் ஊராட்சி







**200mm dia AC pipe line leak was rectified and water supply effected on 11.3.2026 under Vallanathi CWSS**

# Action taken on the Water supply issues reported

**DINAKARAN - 12/03/2026**



தினகரன் 12.03.2026

## கே.பி.டி கூட்டு குடிநீர் திட்ட குழாய்களில் அடிக்கடி உடைப்பு

### நிரந்தர தீர்வு காண வலியுறுத்தல்

தேவாரம், மார்ச். 12: தேவாரம், கோம்பை பண்ணைப்புரம், உள்ளிட்ட பேரூராட்சியில் வசிக்கக்கூடிய பொதுமக்கள் தட்டுப்பாடு இல்லாமல் குடிநீர் பெற வேண்டும் என்ற நோக்கத்துடன், கே.பி.டி (கோம்பை, பண்ணைப்புரம், தேவாரம்) கூட்டுக் குடிநீர் திட்டம் உருவாக்கப்பட்டது.

இதற்காக லோயர் கேம்ப் முல்லையாற்றில் உறைகிணறுகள் அமைக்கப்பட்டு பூமிக்கடியில் பைப்லைன்கள் பதிக்கப்பட்டுள்ளன. இக்குழாய்கள் மூலம் ஒவ்வொரு ஊர்களிலும் அமைக்கப்பட்டுள்ள மேல்நிலைத் தொட்டியில் குடிதண்ணீர் ஏற்றப்பட்டு குடிநீர் விநியோகம் நடைபெற்று வருகிறது. கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக கே.பி.டி திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில் லோயர் கேம்பில் இருந்து பதிக்கப்பட்டுள்ள குழாய்கள் சுமார் 20க்கும் மேற்பட்ட இடங்களில் அடிக்கடி உடைப்பு ஏற்படுகிறது. குறிப்பாக கோம்பை, பண்ணைபுரம், தேவாரம் ஆகிய நெடுஞ்சாலைகள் ஓரங்களில் பதிக்கப்பட்டுள்ள கூட்டு குழாய்களில் உடைப்பு ஏற்பட்டு அவை சாலையின் வழியே செல்கின்றன. தற்போது கோடை காலம் என்பதால் அதிகமான அளவில் பூமிக்கடியில் பதிக்கப்பட்டுள்ள பைப்புகள் வெடிப்பு ஏற்பட்டு குடிநீரே செல்ல முடியாத நிலை ஏற்படுகிறது.

எனவே இதற்கு நிரந்த தீர்வு காண வேண்டும். மேலும், மாற்றாக புதிய திட்டங்கள் வர வேண்டும் என்றும் குடிநீர் எல்லா காலங்களிலும் குடிப்பதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தேவாரம், கோம்பை, பண்ணைப்புரம் பகுதியில் வசிக்கின்ற பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.







**250mm AC pipe replaced with 250mm DI pipe line under revamping of Kombai, Pannaipuram Thevaram CWSS in Theni District**

# Action taken on the Water supply issues reported

**DINAMALAR – 12.03.2026**



## காவிரி குழாயை சேதப்படுத்தும் கும்பல்
## பொசுக்குடியில் குடிநீர் பற்றாக்குறை

### அதிகாரிகள் நடவடிக்கை தேவை







Action taken to remove the illegal connection under old Ramnad CWSS

# Action taken on the Water supply issues reported

DINAKARAN-12/03/2026



14 • Dinakaran • Trichy • 12.3.2026

குடிநீர் வீணாகும் அவலம்

கரூர் -திண்டுக்கல் மெயின்ரோடு வெங்கல்பட்டி பாலம் அருகே குடிநீர் குழாய் உடைந்து தண்ணீர் வீணாகிறது.




**Pipe line leak was rectified and water supply effected on 15.03.2026 under Dindigul CWSS**

# Action taken on the Water supply issues reported

**DINAKARAN-12/03/2026**



கள்ளக்குறிச்சி வட்டம் நீலமங்கலம் பேருந்து நிலையத்தில்

**மணலூர்பேட்டையில் இருந்து வரும் குடிநீர் குழாய் உடைப்பு சரி செய்ய கோரிக்கை!**

கள்ளக்குறிச்சி மாவட்டம் கள்ளக்குறிச்சி வட்டம் நீலமங்கலம் பேருந்து நிலையத்தில் மணலூர்பேட்டையில் இருந்து வரும் குடிநீர் குழாய் உடைப்பு ஏற்பட்டு, பல மாதங்களாக வீணாக செல்கிறது. இந்த வீணாக செல்லும் குடிநீர் தார் சாலையில் கசிவு ஏற்பட்டு செல்கிறது. இந்த சாலையில் ஆயிரக்கணக்கான வாகனங்கள் செல்வதால் தார் சாலை பெயர்ந்து குழி தோன்றியுள்ளது. இரவு நேரங்களில் செல்லும் வாகன ஓட்டிகள் கடும் சிரமத்திற்கு ஆளாகின்றனர். இதனால் விபத்து ஏற்படும் அபாய நிலையில் உள்ளது.

உடனடியாக சரி செய்து தரக்கோரி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிக்கு அப்பகுதி மக்கள் கோரிக்கை.




**500mm PSC pipe line leak was rectified and water supply effected on 13.03.2026 under Rishivandiyam CWSS in Kallakurichi District**

# Action taken on the Water supply issues reported

**DINAMALAR -12/03/2026**



18 நாட்களாக குடிநீர் இல்லை
ஸ்ரீவி., மக்கள் பஸ் மறியல்

ஸ்ரீவில்லிபுத்துார், மார்ச் 12-

ஸ்ரீவில்லிபுத்துாரில் பல்வேறு தெருக்களில் 18 நாட்களாக குடிநீர் சப்ளை இல்லாததால் பாதிக்கப்பட்ட மக்கள் பஸ் மறியலில் ஈடுபட்டனர். அவர்களை கைது செய்வோம் என போலீஸ் மிரட்டியதால் மக்கள் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

ஸ்ரீவில்லிபுத்துார் நகராட்சியில் 15 ஆயிரத்துக்கு மேற்பட்ட வீடுகள் உள்ள நிலையில், நகராட்சி சார்பில் வாரம் ஒரு முறை குடிநீர் சப்ளை செய்யப்பட்டு வந்தது.

இந்நிலையில் கடந்த 18 நாட்களாக நகரின் பெரும்பாலான தெருக்களில் குடிநீர் சப்ளை கிடைக்கவில்லை.

இதற்கான காரணம் என்ன, எப்போது குடிநீர் விநியோகம் கிடைக்கும் என நகராட்சி சார்பில் மக்களுக்கு தெரிவிக்கப்படவில்லை.

இதனால் ஒரு குடம் தண்ணீரை ரூ.12 கொடுத்து மக்கள் வாங்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் நேற்று காலை 9:45 மணிக்கு மாரியம்மன் கோவில் கிழக்கு தெருவை சேர்ந்த ஏராளமான மக்கள் காலி குடங்களுடன் பஸ் மறியலில் ஈடுபட்டனர்.

அவர்களை கலைந்து செல்லுங்கள், இல்லையெனில் கைது செய்வோம் என போலீஸ் மிரட்டியதால் மக்கள் ஆவேசம் அடைந்தனர்.

தகவல் அறிந்த நகராட்சி கமிஷனர் குமா[illegible] போராட்டத்தில் ஈடுபட்ட மக்களிடம் பேச்சு வார்த்தை நடத்தி மாலை 6:00 மணிக்குள் குடிநீர் சப்ளை செய்யப்படும் என உறுதி அளித்தார்.

மதியம் 2:00 மணிக்கு நகராட்சி லாரி மூலம் மாரியம்மன் கோவில் தெருவில் குடிநீர் சப்ளை செய்யப்பட்டது.





**Canals are made to increase the water level at headworks under Vasudevanallur CWSS in Tenkasi district**

# Action taken on the Water supply issues reported

DINAMALAR -13/03/2026



தினமலர்

13 MAR 2026

வேலூர் புதிய பைபாஸ் சாலையோரம் உள்ள கூட்டுக்குடிநீர் பைப் லைனில் உடைப்பு ஏற்பட்டு, வெளியேறும் குடிநீர் அந்த வழியாக செல்லும் கழிவுநீருடன் கலந்து ஆறாக ஓடுகிறது. பல நாட்களாக தொடரும் இந்த அவலத்தை சீரமைக்க, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.





600mm MS pipe damaged due to Corporation work was rectified and water supply effected under Vellore CWSS

# Action taken on the Water supply issues reported

**DAILYTHANTHI -16/03/2026**



தினத்தந்தி 16 MAR 2026

வெப்படையில்

## சீரான குடிநீர் கேட்டு பொதுமக்கள் சாலை மறியல்

### போக்குவரத்து பாதிப்பு

திருச்செங்கோடு, மார்ச்.16- வெப்படையில் சீரான குடிநீர் கேட்டு பொதுமக்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர். இதனால் ஒரு மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

**சாலை மறியல்**

நாமக்கல் மாவட்டம் வெப்படை இலந்தகுட்டை ஊராட்சிக்குட்பட்ட எம்.ஜி.ஆர். நகர், அண்ணா நகர் உள்ளிட்ட பகுதிகளில் 100-க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன. கடந்த சில நாட்களாக இப்பகுதிக்கு குடிநீர் வசதி இல்லாமல் பொதுமக்கள் மிகவும் அவதியுற்று வந்தனர். இதுகுறித்து பொதுமக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் புகார் அளித்துள்ளனர். ஆனால் இது நாள்வரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இந்நிலையில் சீரான குடிநீர் வழங்க கோரி 100-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் திரண்டு வந்து வெப்படை 4 ரோட்டில் காலிக்குடங்களுடன் மறியல்போராட்டத்தில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது. அப்போது குடிநீர் பிரச்சினையை விரைவில் தீர்க்க வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

**பேச்சுவார்த்தை**

தகவல் அறிந்து வந்த வெப்படை போலீஸ் இன்ஸ்பெக்டர் [illegible] மற்றும் போலீசார், ஊராட்சி நிர்வாக அலுவலர் மற்றும் வருவாய்த்துறையினர் சாலை மறியலில் ஈடுபட்ட பொதுமக்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது சீரான குடிநீர் வழங்க உரிய நடவடிக்கை எடுப்பதாக அவர்கள் உறுதி அளித்தனர். இதனை தொடர்ந்து மறியல் போராட்டத்தை கைவிட்டு அங்கிருந்து பொதுமக்கள் கலைந்து சென்றனர். இந்த சாலை மறியல் போராட்டத்தால் சேலம்-சங்ககிரி சாலையில் 1 மணி நேரம் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது.

மேலும் ஊராட்சி சார்பில் உடனடியாக லாரிகள் மூலமாக குடிநீர் பிரச்சினை நிலவிய பகுதிகளுக்கு தண்ணீர் வினியோகம் செய்யப்பட்டது.




**150mm CI pipe line leak was rectified and water supply effected from 16.03.2026 under New Rasipuram CWSS in Namakkal district**

# Action taken on the Water supply issues reported

**DINAMALAR -16/03/2026**

## எஸ்.வாகைக்குளத்தில் குடிநீர் நிறுத்தம்: பொதுமக்கள் அவதி

**சாயல்குடி, மார்ச் 16–** சாயல்குடி அருகே எஸ்.வாகைக்குளத்தில் கடந்த இருவாரங்களுக்கு மேலாக காவிரி நீர் வரத்து இல்லாததால் பொதுமக்கள் சிரமத்தை சந்தித்து வருகின்றனர்.

எஸ்.வாகைக்குளம் ஊராட்சியில் உள்ள குறிப்பிட்ட பகுதியில் 70க்கும் அதிகமான குடும்பங்கள் வசித்து வருகின்றனர். காவிரி குடிநீர் முறையாக விநியோகம் செய்து வரும் நிலையில் குறிப்பிட்ட பகுதிகளுக்கு மட்டும் தண்ணீரை நிறுத்தி வைத்துள்ளனர். இதனால் பொதுமக்கள் பெரும் சிரமத்தை சந்தித்து வருகின்றனர்.

எஸ்.வாகைக்குளத்தைச் சேர்ந்த மலை முருகன் கூறியதாவது:

குறிப்பிட்ட பகுதிகளுக்கு செல்லக்கூடிய தண்ணீர் செல்லக்கூடிய வால்வு அடைத்து வைத்து விட்டனர். கேட்டால் முறையான பதில் சொல்லவில்லை.

இதனால் 70க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் குடிநீருக்காக சிரமப்படுகின்றனர். தெரு குழாய்கள் காட்சி பொருளாக உள்ளது.

ஒரு குடம் குடிநீர் ரூ.10 விலைக்கு வாங்கி பயன்படுத்தி வருகிறோம். எனவே முறையாக குடிநீர் விநியோகம் செய்வதற்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.





**63mm PVC pipe line leak was rectified and water supply effected on 16.03.2026 under Ramnad CWSS**

# Action taken on the Water supply issues reported

**DINAMALAR - 17/03/2026**



திண்டுக்கல்லில் குழாய் உடைந்து வீணாகும் குடிநீர்

தட்டுப்பாடு ஏற்படும் அபாயம்



ஜி.டி.என் சாலையில் குழாய் கசிவு சரிசெய்யப்பட்ட புகைப்படம்

தாடிக்கொம்பு சாலையில் குழாய் கசிவு சரிசெய்யப்பட்ட புகைப்படம்

**350 mm & 300mm dia DI pipe line leak were rectified and water supply effected on 18.03.2026 under Dindigul CWSS**


# Action taken on the Water supply issues reported

**DINATHANTHI-18.03.2026**

வட்டன்விளையில்

## வீடுகளில் கருப்புக்கொடி ஏற்றி கிராமமக்கள் போராட்டம்

### குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு காண கோரிக்கை



வட்டன்விளை கிராமத்தில் உள்ள ஒரு வீட்டில் குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு காணாத அதிகாரிகளை கண்டித்து கருப்புக்கொடி ஏற்றி இருப்பதை படத்தில் காணலாம்.

குலசேகரன்பட்டினம், மார்ச்.18-

வட்டன்விளையில் 2 வாரத்திற்கும் மேலாக குடிநீர் வினியோகத்திற்கு நடவடிக்கை எடுக்காத அதிகாரிகளை கண்டித்தும், உடனடியாக குழாயில் குடிநீர் வழங்க கோரியும் கிராம மக்கள் வீடுகளில் கருப்புக் கொடி ஏற்றி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

**குடிநீர் பிரச்சினை**

உடன்குடி பஞ்சாயத்து யூனியன் பரமன்குறிச்சி பஞ்சாயத்து உட்பட்ட வட்டன்விளை கிராமத்தில் 500-க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். இக்கிராமத்தில் நிலத்தடி நீரும் உவர்ப்பு தன்மையுடன் உள்ளது. இதனால் இக்கிராமத்திற்கு தாமிரபரணி கூட்டு திட்டத்தில் வீடுகள் மற்றும் பொதுக்குழாய்களுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வந்தது.

இந்த நிலையில், கடந்த 2 வாரங்களுக்கும் மேலாக கூட்டு திட்ட குழாயில் குடிநீர் வினியோகம் நிறுத்தப்பட்டு உள்ளது. இதனால் இக்கிராமத்தில் குடிநீர் பிரச்சினை தலைவிரித்தாடி வருகிறது. குடிநீருக்காக இக்கிராம மக்கள் பக்கத்து கிராமத்திற்கு சென்று குடங்களில் பிடித்து வருகின்றனர். அதுவும் போதிய அளவு குடிநீர் கிடைக்காததால் விலைக்கு வாங்கி குடிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

**வீடுகளில் கருப்புக்கொடி**

இதுகுறித்து ஊராட்சி நிர்வாகத்திடமும், திட்டத்தை பராமரிக்கும் குடிநீர் வாரிய அதிகாரிகளிடம் கிராமமக்கள தொடர்ந்து கோரிக்கை விடுத்தும், குடிநீர் வினியோகத்திற்கு நடவடிக்கை எடுக்கவில்லை.

இதனால் வேதனை அடைந்துள்ள கிராம மக்கள் குடிநீர் வினியோகத்திற்கு நடவடிக்கை எடுக்காத அதிகாரிகளை கண்டித்தும், உடனடியாக குழாயில் குடிநீர் வழங்க வலியுறுத்தியும் வீடுகளில் கருப்புக் கொடி ஏற்றி போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

**அதிகாரிகள் விளக்கம்**

இப்பிரச்சினை குறித்து குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகள் கூறுகையில், கூட்டு குடிநீர் திட்ட குழாயில் இக்கிராமத்திற்கு வரும் வழியில் அடைப்பு இருப்பதால் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இன்னும் ஓரிரு நாட்களில் குழாயில் உள்ள அடைப்புகளை நீக்கி குடிநீர் வினியாகத்திற்கு ஏற்பாடு செய்யப்படும் என தெரிவித்தனர். விரைவில் குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு காணாவிட்டால் சாலைமறியல் போராட்டத்தில் ஈடுபடுவோம் என கிராம மக்கள் அறிவித்துள்ளனர்.







**63mm PVC pipe line leak was rectified and water supply effected on19.03.2026 under CWSS to 159 rural habitations in Thoothukudi district**

# Action taken on the Water supply issues reported

**DINATHANTHI-18/03/2026**




பழனி சண்முகநதி பாலத்தில்

குழாய் உடைந்து நீரூற்றுபோல் வெளியேறிய தண்ணீர்

பழனி, மார்ச்.18-

பழனி-உடுமலை சாலையில் சண்முகநதி பாலம் அமைந்துள்ளது. இந்த பாலத்தில் குழாய் மூலம் நெய்க்காரப்பட்டி, அ.கலையம்புத்தூர் உள்ளிட்ட கிராமங்களுக்கு குடிநீர் கொண்டு செல்லப்படுகிறது. இந்தநிலையில் நேற்று காலை திடீரென்று குடிநீர் குழாய் உடைந்து தண்ணீர் நீரூற்றுபோல சுமார் 10 அடி உயரத்துக்கு பீய்ச்சி அடித்தது. இதனால் அந்த வழியாக சென்ற வாகனங்கள் மீது தண்ணீர் விழுந்தது. இரு சக்கர வாகன ஓட்டிகள் நீரூற்றில் நனைந்தபடி சென்றனர். இதுகுறித்து குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அதன்பேரில் அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் விரைந்து வந்தனர். பின்னர் குடிநீர் வினியோகம் நிறுத்தப்பட்டு, உடைந்த குழாயை ஊழியர்கள் சீரமைத்தனர்.

தினத்தந்தி செய்தி நாளிதழ் 18.03.2026




குடிநீர் குழாய் நீர்கசிவு சரிசெய்யபட்ட புகைப்படம்

**150 GI pipe line leak was rectified and water supply effected on17.03.2026 under new Ramnad CWSS in Dindigul district**

# Action taken on the Water supply issues reported

**DINAMALAR - 19/03/2026**



# காவிரி குடிநீர் குழாயில் உடைப்பு

## இரு நாட்களுக்கு விநியோகம் கட்

**குஜிலியம்பாறை, மார்ச் 19-**
குஜிலியம்பாறை அருகே காவிரி குடிநீர் குழாயில் உடைப்பு ஏற்பட்டதால் வேடசந்தூர், ஒட்டன்சத்திரம், ரெட்டியார்சத்திரம் உள்ளிட்ட பகுதிகளில் இரு நாட்களுக்கு குடிநீர் விநியோகம் இருக்காது என தெரிவிக்கப்பட்டு உள்ளது.


கரூர் காவிரி ஆற்றில் கட்டளை பகுதியில் இரு கிணறுகள் அமைத்து ராட்சத குழாய்கள் மூலம் கரூர் ஜெகதாபி, பாளையம், குஜிலியம்பாறை, கோவிலூர் வழியாக வேடசந்தூர், ஒட்டன்சத்திரம், ரெட்டியார்சத்திரம், கன்னிவாடி பகுதிகளுக்கு குடிநீர் கொண்டு செல்லப்படுகிறது.

இந்த குழாயில் அடிக்கடி உடைப்பு ஏற்படுவதால் குடிநீர் விநியோகம் பாதிக்கப்படுகிறது.

நேற்று மதியம் 1:20 மணிக்கு கோவிலூர் ரோட்டில் உள்ள பெட்ரோல் பங்க் அருகே குழாயில் உடைப்பு ஏற்பட்டது. இதனால் தண்ணீர் பீறிட்டு ரோட்டில் ஆறாக ஓடியது.

இதையடுத்து வேடசந்தூர், ஒட்டன்சத்திரம், ரெட்டியார்சத்திரம், கன்னிவாடி உள்ளிட்ட கிராம பகுதிகளுக்கு இன்றும், நாளையும் (மார்ச்19, 20) இரு நாட்களுக்கு குடிநீர் விநியோகம் இருக்காது என காவிரி குடிநீர் திட்ட ஊழியர்கள் தெரிவித்தனர்.

குஜிலியம்பாறை அருகே காவிரி குடிநீர் குழாயில் உடைப்பு ஏற்பட்டு பீறிட்டு வெளியேறிய நீர்.




**600mm PSC pipeline leak was rectified and water supply effected on 19.03.2026 under CWSS to Vedasandur in Dindigul district**

# Action taken on the Water supply issues reported

**DINATHANTHI -20/03/2026**



குடிநீர்கேட்டு காலி குடங்களுடன் கிராம மக்கள் சாலை மறியல்

விருத்தாசலம் அருகே பரபரப்பு




**350mm DI pipe damaged on 20.03.2026 was rectified and water supply effected on 23.03.2026 under Thittakudi CWSS in Cuddalore district**

# Action taken on the Water supply issues reported

**DINAMALAR-20/03/2026**



# புதிய தாமிரபரணி குடிநீர் திட்டத்தில் குழாய்கள் அடிக்கடி உடைவதால் நகராட்சிகளில் தட்டுப்பாடு

**விருதுநகர் மார்ச் 20–**

விருதுநகர், அருப்புக்கோட்டை, சாத்துார் ஆகிய நகராட்சி பகுதிகளுக்கு குடிநீர் வழங்கி வரும் புதிய தாமிரபரணி குடிநீர் குழாய்களில் அடிக்கடி உடைப்பு ஏற்படுவதால் குடிநீரின்றி மக்கள் அவதிப்படுகின்றனர்.

விருதுநகர், அருப்புக்கோட்டை, சாத்துார் ஆகிய நகராட்சி பகுதி மக்களின் குடிநீர் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் ரூ.450 கோடிக்கு புதிய தாமிரபரணி குடிநீர் திட்டப் பணிகள் 2021ல் துவங்கப்பட்டது. 2024 மார்ச்சில் செயல்பாட்டிற்கு வந்தது. இதன் படி அருப்புக்கோட்டைக்கு நாள் ஒன்றுக்கு ஒரு கோடியே 14 லட்சம் லிட்டர் குடிநீரும், விருதுநகர் நகராட்சி பகுதிக்கு 84 லட்சம் லிட்டரும், சாத்துாருக்கு 24 லட்சம் லிட்டரும் வழங்க வேண்டும். ஆனால் அதன்படி முழுமையான அளவு எந்த நகராட்சிக்கும் இதுவரை குடிநீர் வழங்கவில்லை.

மாவட்ட தலைநகரான விருதுநகருக்கு அதிகபட்சமாக 60 லட்சம் லிட்டர் வரை மட்டுமே குடிநீர் வழங்கப்பட்டுள்ளது.

சாத்துார் நென்மேனியில் நேற்று முன்தினம் புதிய தாமிரபரணி திட்ட பிரதான குழாய் சரி செய்யப்பட்ட நிலையில் அன்றிரவே மீண்டும் உடைப்பு ஏற்பட்டது.

இதன் மூலம் விருதுநகரின் பெரும்பாலான வார்டுகளில் குடிநீர் வினியோகம் செய்யப்பட்டாலும், சில பகுதிகளுக்கு தாமிரபரணி குடிநீர் கிடைக்காத நிலை உள்ளது. மேலும் புதிய திட்டத்தால் 10 முதல் 12 நாட்களுக்கு ஒரு முறை வழங்கப்பட்ட வினியோக இடைவெளி 4 முதல் 6 நாட்களாக குறைக்கப்பட்டது.

அதே நேரம் புதிய தாமிரபரணி திட்டத்தில் பிரதான குழாய்களில் அடிக்கடி உடைப்பு ஏற்படுகிறது. இதனால் 3 நகராட்சி பகுதிகளிலும் 5 முதல் 10 நாட்கள் வரை குடிநீர் வினியோகம் பாதிக்கப்படுகிறது. இந்தத் திட்டம் துவங்கப்பட்டு இரு ஆண்டுகள் மட்டுமே ஆகியுள்ள நிலையில் அடிக்கடி பிரதான குழாய்களில் உடைப்பு ஏற்படுகிறது. இதனால் தரமான குழாய்கள் பதிக்கப்பட்டுள்ளதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

15 நாட்களுக்கு முன் சாத்துார் நென்மேனி அருகே பிரதான குடிநீர் குழாயில் உடைப்பு ஏற்பட்டது. ஆனால் அதை சீரமைக்க குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகள் துரித நடவடிக்கை எடுக்கவில்லை. மேலும் உடைப்பால் குடிநீர் வினியோகம் தாமதமாகும் என நகராட்சிகளுக்கு முறையாக தகவல் தெரிவிக்கவில்லை.

சரி செய்து நேற்று முன் தினம் இரவு பம்ப் செய்த நிலையில் மீண்டும் உடைப்பு ஏற்பட்டுள்ளது. இது பெரும் தலைவலியாக வடிகால் வாரியத்திற்கும் உள்ளது. நான்கு மாதங்கள் முன்பும் இதே போல் சென்னல்குடி அருகே பைப் உடைந்தது. பல நாட்கள் குடிநீர் வினியோகம் பாதிக்கப்பட்டது.

இப்போதும் விருதுநகரில் 15 நாட்களாகியும் மக்களுக்கு குடிநீர் வினியோகம் செய்ய முடியாத நிலை உள்ளது. எனவே உடைப்பு நடக்கும் பகுதிகளில் கலெக்டர் கள ஆய்வு நடத்தி கோடைக்கு முன் குடிநீர் பிரச்னைகளுக்கு தீர்வு காண வேண்டும். 3 நாட்களில் பணி முடியும் என்று கூறிய நகராட்சி நிர்வாகம், இதற்கு பதிலாக புதிய குழாய்களை போட்டிருக்கலாம்.




**711mm MS pipe line leak was rectified and water supply effected on 20.03.2026 under Aruppukottai CWSS in Virudhunagar district**

# Action taken on the Water supply issues reported

**DINAMALAR -20/03/2026**



## காவிரி திட்ட குழாயில் உடைப்பு ரோட்டில் வீணாகும் குடிநீர்

**ஒட்டன்சத்திரம், மார்ச் 20–** ஒட்டன்சத்திரம் அருகே காவிரி கூட்டு குடிநீர் குழாயில் உடைப்பு ஏற்பட்டு ரோட்டில் குளம் போல் தண்ணீர் தேங்கி வீணாகிறது.

காவிரி ஆற்றில் இருந்து ஒட்டன்சத்திரம் தொகுதியில் குடிநீர் தேவையை பூர்த்தி செய்வதற்காக குழாய்கள் அமைக்கப்பட்டு உள்ளன. தற்போது பல இடங்களில் சோதனை அடிப்படையில் தண்ணீர் திறந்து விடப்படுகிறது. அழுத்தம் காரணமாக குழாய்களில் உடைப்பு ஏற்படுகிறது. சிறிது நேரத்திலே பெரிய உடைப்பு ஏற்பட்டு அதிகப்படியான தண்ணீர் வெளியேறுகிறது.

ஒட்டன்சத்திரம் அருகே காவேரியம்மாபட்டி பைபாஸ் ரோடு பகுதியில் செல்லும் ராட்சத குழாயில் நேற்று உடைப்பு ஏற்பட்டு தண்ணீர் அருவி போல் சீறிப் பாய்ந்தது. இவற்றை உடனுக்குடன் சீரமைத்தாலும் சிறிது நேரத்திலே அதிகப்படியான தண்ணீர் வெளியேறி விடுகிறது.

வெப்பம் அதிகமாக நிலத்தடி நீர்மட்டம் நாளுக்கு நாள் குறைந்து வரும் நிலையில் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டிய நிலையில் அதிக அளவு தண்ணீர் வீணாவதை தடுக்க அரசு துறையினர் முன் வர வேண்டும்.

காவேரியம்மாபட்டியில் காவிரி குடிநீர் குழாயில் உடைப்பு ஏற்பட்டு வீணாகு தண்ணீர்

தினமலர் செய்தி நாளிதழ் 20.03.2026




குடிநீர் குழாய் நீர்கசிவு சரிசெய்யபட்ட புகைப்படம்

**200 mm O-PVC Pipe line leak was rectified and water supply effected on 20.03.2026 under new Ramnad CWSS in Dindigul district**

# Action taken on the Water supply issues reported

**KALAIKATHIR -24/03/2026**




## குழாய் உடைப்பு: வீணாக ஓடிய குடிநீர்

**போச்சம்பள்ளி, மார்ச் 24**

கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி அடுத்த, மஞ்சமேடு, தென்பெண்ணை ஆற்றிலிருந்து புலியூர், போச்சம்பள்ளி, மத்தூார் உள்ளிட்ட பகுதிகளுக்கு, குழாய் மூலம் குடிநீர் வினியோகம் செய்யப்படுகிறது. நேற்று காலை புலியூர் ஏரிக்கரை பகுதியில், குடிநீர் குழாயில் உடைப்பு ஏற்பட்டு, இரண்டு மணி நேரத்திற்கும் மேலாக, குடிநீர் சாலையில் ஓடியது. இதனால் வாகன ஓட்டிகள் சிரமத்திற்கு ஆளாயினர். தகவலறிந்து வந்த குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகள் குழாய் உடைப்பை சரிசெய்தனர்.

■ போச்சம்பள்ளி, புலியூர் ஏரிக்கரை பகுதியில், குடிநீர் குழாயில் உடைப்பு ஏற்பட்டதால், சாலையில் வீணாக ஓடிய குடிநீர்.






**200mm AC pipe damaged on 22.03.2026 due to Highways Department was rectified and water supply effected on 23.03.2026 under Pochampalli CWSS in Krishnagiri district**

# Action taken on the Water supply issues reported

**DINAMALAR -29.03.2026**



## குடிநீர் குழாய் கசிவால் தேங்கும் தண்ணீரால் பள்ளமான ரோடு

அருப்புக்கோட்டை, மார்ச் 29

அருப்புக்கோட்டை அருகே பெரியவள்ளிகுளம் ரோட்டில் குடிநீர் குழாய் உடைந்து தண்ணீர் தேங்கி, ரோடு சேதமடைவதுடன் பள்ளமான இருப்பதால் விபத்தும் ஏற்படுகிறது.

அருப்புக்கோட்டை அருகே மெட்டுக்குண்டு கிராமத்தில் இருந்து குல்லூர்சந்தை, பெரியவள்ளிக்குளம் வழியாக தாமிரபரணி குடிநீர் குழாய்கள் விருதுநகர் நகராட்சி வரை செல்கிறது.

பெரிய வள்ளிகுளம் ரோட்டில் பதிக்கப்பட்டுள்ள பகிர்மான குழாய் உடைந்து நீர் கசிந்து ரோட்டில் தேங்கி கிடக்கிறது. ஒரு மாதமாக தண்ணீர் வெளியேறுவதால் ரோட்டின் மேல் பகுதி பள்ளமாக மாறிவிட்டது.

பள்ளத்தில் தண்ணீர் இருப்பது தெரியாமல் டூவீலர்கள், நடந்து செல்பவர்கள் தடுமாறி விழுந்து விபத்தும் ஏற்படுகிறது. நீர்க்கசிவை சரிசெய்ய பலமுறை ஊராட்சிக்கும் வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கும் கோரிக்கை வைத்தும் கண்டு கொள்ளவில்லை.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தான் இந்த பணியை செய்ய வேண்டும் என கையை காட்டி ஒதுங்கி விடுகின்றனர். இதனால் தண்ணீர் லட்சக்கணக்கான லிட்டர் வீணாவதுடன் ரோடும் சேதமடைந்து விடுகிறது. மாவட்ட நிர்வாகம் இதுகுறித்து நடவடிக்கை எடுத்து உடனடியாக உடைந்த பகிர்மான குழாயை சரி செய்ய வேண்டும்.

அருப்புக்கோட்டை அருகே பெரியவள்ளி குளம் ரோடு குழாய் உடைந்து நீர் கசிவால் ரோடு சேதமடைந்து கிடங்கானது.




**400mm DI pipe line leak was rectified and water supply effected on 29.03.2026 under Aruppukottai CWSS in Virudhunagar district.**

# Action taken on the Water supply issues reported

**MALAIMALAR -29.03.2026**



கடலூர் முதுநகர் ஆரம்ப சுகாதார நிலையம் அருகே

## குழாய் உடைந்து சாலையில் பெருக்கெடுத்து ஓடிய குடிநீர்

கடலூர், மார்ச். 29—

கடலூர் முதுநகரில் இருந்து துறைமுகம் செல்லும் சாலையில் ஆரம்ப சுகாதார நிலையம் அருகே சாலை ஓரமாக குடிநீர் குழாய் உடைந்து தண்ணீர் சாலையில் பெருக்கெடுத்து ஓடியது. இதன் காரணமாக அப்பகுதியில் குடிநீர் குட்டை போல் தேங்கி காணப்பட்டது.


மேலும் அடிப்படை வசதியான குடிநீர் சாலையில் வீணாக ஓடியதால் அப்பகுதியை சேர்ந்த பொதுமக்களுக்கு குடிநீர் கிடைக்காமல் கடும் அவதி அடைந்து வருகின்றனர். இது மட்டும் இன்றி ஒரு சில வீடுகளில் குடிநீர் சேர் கலந்து கலங்களாக வந்தது. இதனை பார்த்த பொது மக்கள் கடும் அதிர்ச்சடைந்ததோடு தண்ணீரை வெளியில் இருந்து வாங்கக்கூடிய அவல நிலைக்கு தள்ளப்பட்டு உள்ளனர்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் புகார் அளித்தும் உடனடியாக நடவடிக்கை எடுக்கவில்லை. மேலும் தற்போது கோடை வெயில் தொடங்கியுள்ள நிலையில் குடிநீர் கிடைக்காமல் பொதுமக்கள் கடும் அவதி அடைந்து வருவதையும் காண முடிகின்றது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது தொடர்பாக ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொது மக்கள் கோரிக்கை விடுக்குள்ளனர்.

குடிநீர் சாலையில் பெருக்கெடுத்து ஓடியதை படத்தில் காணலாம்.




**200mm PVC pipe line leak was rectified and water supply effected on 31.03.2026 under Cuddalore Mega CWSS in Cuddalore district**

# Action taken on the Water supply issues reported

**DINAMALAR - 31.03.2026**



நடக்கிறது.

## குழாய் உடைந்து ரோட்டில் கசியும் நீர்

வடமதுரை, மார்ச் 31–

வடமதுரை எரியோடு ரோட்டில் காவிரி குழாய்உடைந்துகசியும்நீரால்விபத்துஅபாயம் உள்ளது.

வடமதுரை பகுதிக்கு முதற்கட்ட காவிரி குடிநீர் திட்ட பணி துவங்கிய போது எரியோட்டில் இருந்து பல இடங்களில் ரோடு விளிம்பில் குழாய்கள் பதித்து கேட் வால்வுகள் அமைக்கப்பட்டன.

வடமதுரை ஒட்டன்சத்திரம் மாநில நெடுஞ்சாலையாக தரம் உயர்த்த அகலப்படுத்தும் பணி நடந்தது. அப்போது பல இடங்களில் கேட் வால்வுகளை மூடி ரோடு அமைக்கப்பட்டது.

இதையடுத்து ஆங்காங்கே ரோட்டின் அடியில் இருக்கும் குழாய் உடைந்து நீர் கொப்பளிப்பது பெரும் பிரச்னையாக உள்ளது. நாளடைவில் ரோட்டில் பெரிய பள்ளங்கள் ஏற்பட்டுள்ளன. இரவில் டூவீலர்களில் வருவோர் பள்ளங்களில் தடுமாறி விபத்துகளை சந்திக்கின்றனர்.

தற்போது வடமதுரை – வெள்ளமடை பகுதியில் குழாய் உடைந்து ரோட்டில் நீர் வெளியேறுகிறது. ரோடும் ஆபத்தான பகுதியாக மாறி வருகிறது. சீரமைப்பு பணிக்கு குடிநீர் வாரியம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வடமதுரை – வெள்ளம்மடை பகுதியில் குழாய் உடைப்பால் ரோட்டில் கசியும் நீர்







**250mm AC pipeline leak was rectified and water supply effected on 02.04.2026 under Dindigul CWSS in Dindigul district**